DEPOSITION OF WITNESS
---
IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 158/2019 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சந்தானம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.03.2026

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரிகின்றேன். நான் மனுதாரர் தரப்பில் 1வது சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 13.05.2018 தேதியிட்ட கேனிக்கரை காவல் நிலையத்தில் குற்ற எண்.104/2018 தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
2. TN65–Z– 0907 வண்டியின் இன்சூரன்ஸ் பாலிசி **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
3. விபத்தில் லாரி ஓட்டி வந்த ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. TN65– N–1654 பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வறிக்கை **சான்றிட்டநகல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
5. TN65– N 1654 பேருந்திற்கு பொருள்கள் வாங்கிய விவரம் **அசல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

1.எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் அழைப்பாணை எதுவும் வரப்பெறவில்லை என்றால் சரிதான். என்னுடை போக்குவரத்து கழக மேலாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க என்னுடை நிறுவனத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த விபத்தின் போது அரசு பேருந்தின் ஓட்டுநர் நான் தான் என்றால் சரிதான். இந்த விபத்தின் போது அரசு பேருந்து எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி சென்றது என்றால் இராமேஷ்வரத்தில் இருந்து மதுரை நோக்கி சென்று கொண்டிருந்தது. விபத்தில் அரசு பேருந்தும், ட்ராக்டர் ஒன்றும் லாரி ஒன்றும் ஈடுபட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ட்ராக்டர் தான் அரசு பேருந்து மீது மோதியதா என்றால் லாரிதான் மோதியது. லாரி வந்து அரசு பேருந்தை ஒரசி சென்று ட்ராக்டரை மோதியதா என்றால் இல்லை, அரசு பேருந்தில் மோதி விட்டு ட்ராக்டரில் மோதியது.

2. இந்த விபத்திற்கு காரணம் என்னுடைய கவனக்குறைவால் தான் நடந்தது என்றும் நான் அரசு பேருந்தை ஓட்டும் போது எந்த வித சமிக்கைகள் செய்யாமல் திடீர் என பேருந்தின் பிரேக்கை போட்டு நிறுத்தியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதுபோல அரசு பேருந்துதிற்கு சேதம் ஏற்பட்டதாக சொல்லி ரூ.42,319/– இழப்பீடு கோரியுள்ளீர்கள் என்றால் சரிதான். அரசு பேருந்து பழுதடைந்தால் அதை சரி செய்வதற்கு ஆள்கள் உள்ளனர் என்று சொன்னால் சரிதான். அரசு போக்குவரத்து கழக ஊழியர்களை அதனை சரி செய்துவிடுவார்கள் என்றால் சரிதான். அதற்காக அவர்களுக்கு அரசு தனியாக சம்பளம் கொடுத்து வருகிறது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பில்லில் ரூ.5,100/– தொழிலாளர் தொகை என்று தனியாக கேட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த தொகையும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல

என்று சொன்னால் சரியல்ல. அதுபோல இந்த விபத்திற்கு காரணம் என்னுடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் என்பதால் எதிர்மனுதாரர் எங்களுக்க எந்த வித இழப்பீடும் கடைமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.